**Gesundheitsdienst** Bereich Bern Mitte Tel. 031 321 69 27
Bereich Bern Nord Tel. 031 321 58 85
Bereich Bern Süd Tel. 031 321 68 94
Bereich Bern West Tel. 031 321 58 58

Stadt Bern

Direktion für Bildung
Soziales und Sport

*Hepatitis-B-Information – Tamilisch*

# ஹெப்பாட்டிட்டிஸ் B – தடுப்பு ஊசி காக்கிறது

சுவிசில் ஒவ்வோர் ஆண்டும் 2000–3000 பேர் வரை, பெரும்பாலும் இளவயதினர் (மஞ்சள் காமா லை நோயின் ஒரு வகையான) ஹெப்பாட்டிட்டிஸ் B தொற்று நோய்க்கு ஆளாகிறார்கள். சில ஆண்டுகளாக இந்த நோயைத் தீர்க்கத் தக்க நல்ல தடுப்பு மருந்து உள்ளது.

## ஹெப்பாட்டிட்டிஸ் B என்பது என்ன?

ஹெப்பாட்டிட்டிஸ் B என்பது தொற்று நச்சுக்கிருமிகளால் பரப்பப் படும் ஈரல் நோய் ஆகும். இந்த நோயால் தொற்றப் பட்டவர்களில் மூன்றில் ஒருபங்கினர் மட்டுமே, தாம் மஞ்சள்காமாலை நோயால் பீடிக்கப் பட்டுள்ளதைத் தோல் மற்றும் கண்கள் மஞ்சள் நிறமாக மாறி வருவதும், சிறுநீர் பிரவுன் அதாவது மர வண்ணமாகவும், மலம் வெளிரிய நிறத்திலும் இருப்பது போன்ற தெளிவான குறிப்புகளால் உணர்கிறார்கள்.
இந்த நோயால் தொற்றப் பட்டவர்களில் ஏறத்தாழ 10% னர்க்கு (நீண்ட நாட்கள்) தீராத ஈரல் நோய் உண்டாகிறது.

## ஹெப்பாட்டிட்டிஸ் B அப்படி என்ன பயங்கரமான ஒரு நோய்?

தற்பொழுது சுவிசில் ஏறத்தாழ 20000 பேர் நீண்டநாள் தீராத காமாலை நோயால் பீடிக்கப் பட்டு ள்ளார்கள். அப்படிப் பட்டவர்களில் நிறையப் பேர்களுக்கு இந்த நோய் வந்திருப்பதற்கான வெளிப்படையான அறிகுறிகள் தென்படுவதில்லை. ஆகவே தான் இந்த நோய் யாரும் அறியா மலேயே முற்றிலுமாக மற்றவர்களுக்கும் பரவித் தொற்றிக் கொள்கிறது.
இந்த நோய் பரவிய பின்னர் தடுப்பு ஊசி போட்டுக் கொள்வது காலங்கடந்த செயலாகும்.
அந்த நிலையில் ஹெப்பாட்டிட்டிஸ் B நோய்க்கு நல்லதொரு மருத்துவம் இதுவரையில்இன்னும் வரவில்லை.
சுவிசில் ஹெப்பாட்டிட்டிஸ் B நோய் முற்றிய நிலையில் ஓர் ஆண்டில் 5 முதல் 10 பேர் வரையி லும், நீண்ட நாட்கள் அல்லது தீராத நிலையில் ஹெப்பாட்டிட்டிஸ் B யால் பீடிக்கப் பட்டவர்க ளில் 20 முதல் 50 பேர் வரையில் ஈரல் முற்றிலும் நாசமான நிலையில் அல்லது ஈரல் புற்று நோயில் அது முடிந்த நிலையிலுமாக இறக்கிறார்கள்.

## ஹெப்பாட்டிட்டிஸ் B எப்படி மற்றவர்களுக்குப் பரப்பப் படுகிறது?

ஹெப்பாட்டிட்டிஸ் B – நச்சுக்கிருமி உடலின் எல்லா வகையான திரவங்கள் மூலமாகவும், ஆனால் குறிப்பாக இரத்தத்தின் மூலமாக மிகவும் மோசமாகத் தொற்றிக் கொள்ளக் கூடியதாகும்.
அதிலும் குறிப்பாக இளைஞர் களும், வளர்ந்த இளம் வயதினரும் இந்த நோயால் தொற்றிக் கொள்ளப் படுகிறார்கள். **இந்த நோய் தொற்றுவதற்கான பெரும்பாலான வழிகளாவன:**

- இந்த நோய் தொற்றியுள்ளவர்களுடன் உடலுறவு கொள்வது,
- துப்புரவு செய்யப்படாத ஊசிகளைப் பாவித்துப் போதை மருந்துகளை உடலில் ஏற்றிக்கொள் வது
- துப்புரவு செய்யப் படாத கருவிகளைக் கொண்டு பச்சை குத்திக் கொள்வதும், காது மூக்கு போன்றவற்றில் ஆபரணங்கள் அணிந்து கொள்வதற்காகத் துளை போட்டுக் கொள்வதும்,
- இந்த நோயால் பீடிக்கப் பட்டுள்ளவருடன் உடலால் நெருங்கிய தொடர்புகள் வைத்துக் கொள்வது, மற்றும்
- பிள்ளை பெறும் தாய் இந்த நோயால் பீடிக்கப் பட்டிருந்தால் பிறக்கும் குழந்தைக்கும் இந் நோய் தொற்றும்.

இந்நோய் தொற்றியுள்ள இரத்தம் காயம் ஏதுமில்லாத நலத்துடனுள்ள வேறொருவர் தோல் மீது படுவதாலும், உணவுப் பண்டங்கள், மற்றும் குடிபானங்கள் மூலமாகவும் இந்த நோய் தொற்றிக் கொள்ளும் ஆபத்து இல்லை. (ஹெப்பாட்டிட்டிஸ் A வகை நோயால் அத்தகு ஆபத்து உண்டு)

**ஒருவர் தம்மை எவ்வாறு காத்துக் கொள்ளலாம்?**

கடந்த சில ஆண்டுகளாக மிகவும் பயன் அளிக்கத் தக்க தடுப்பு ஊசி மருந்து ஒன்று சுவிசில் உள்ள 11 முதல் 15 வயது நிறைந்த அனைத்து இளவயதினருக்கும் அறிவுறுத்தப் படுகிறது. காரணம் இந்த வயதினர், தொற்று நோய்க்கு ஆளாகக் கூடிய மிகவும் ஆபத்தான (20க்கும் 24 க்கும் இடைப் பட்ட) வயதின் எல்லைக் கட்டத்துக்குச் சரியாக நேரடி முன்னிலையில் இருப்பது வேயாகும்.
இத்தடுப்பு ஊசி மருந்து 6 மாதக் காலத்துக்குள் 2 தடவைகளாக கரத்தின் மேற்பகுதியில் செலு த்தப் படும். பொதுவாக இத்தடுப்பு மருந்து வாழ்நாள் முழுவதும் இந்த நோயிலிருந்து பாதுகாப் பளிக்கும்.
இந்தத் தடுப்பு மருந்தினை ஊசி மூலம் ஏற்றிக் கொண்டவர்களில் ஏறத்தாழ 10 பேர்களில் ஒரு வருக்கு ஊசி குத்தப் பட்ட இடத்தில் சற்று வலியேற்படவோ அல்லது அந்த இடத்தில் சிவந்து காணப்படவோ நேரிடலாம். அதன் மூலம் எவ்விதமான கேடும் இல்லை. இந்தத் தடுப்பு மருந்து மூலம் கடுமையான பக்க விளைவுகள் ஏற்படுவது மிகமிக அரிதாகும்.

**உங்களுடைய பள்ளி மருத்துவர் அல்லது குடும்ப மருத்துவர் மூலம் இது தொடர்பாக விளக்கம் பெறுங்கள் !**

*Deutsche Fassung erstellt durch den Schulärztlichen Dienst Zürich.*